[1968 ஆகஸ்ட் 30

குடியாத்தம் சாக்கடை அமைப்புத் திட்டம்.

*206 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரமன்றம் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசிடம் கடனே, மானியமோ கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் தற்போதைய நிதி பற்ருக்குறை காரணமாக, குடியாத்தத்திற்கு இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் ஒரு வடிகால் திட்டம் துவக்குவதற்கு சாத்தியமாகாது என்று அந்த நகரசபைக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 100-க்கு 90 சதவீதம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும், பீடித் தொழிலாளர்களும் கொண்டதும், அந்த மாவட்டத்தின் தலைநகருக்கு அடுத்த மிகப்பெரிய ஜனத் தொகை கொண்டதுமான அந்த ஊரிலே இந்தச் சாக்கடைக் கால்வாய்த் திட்டம் இல்லாத காரணத்தால் அடிக்கடி அவர்கள் வியாதியஸ்தர்களாகி அதற்குப் போதுமான அளவு சிகிச்சை பெற வசதியில்லாமல், ஆஸ்பத்திரியில் போதுமான படுக்கை வசதியில்லாமல் இருப்பது தெரியும். அதை உத்தேசித்தாவது. இப்பொழுது இல்லை என்ருலும் அடுத்த ஆண்டிலாவது உடனடியாக அதில் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தத் திட்டம் எப்பொழுதாவது, ஏதாவது ஒரு காலத்தில் நிச்சயமாக வரும். ஆனல், தற்போது நிதிப் பற்ருக்குறை காரணமாக இருக்கிறது.

திரு. டி. மார்டின் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். சற்றுச் சில நிமிஷங்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் அமைச்சரவர்கள் 1962 முதல் 1966 வரையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் குழுவில் நீதிபதிகள் இல்லை என்று சொன்னுர்கள். இதே நேரத்தில், ஜஸ்டிஸ் சுப்பிரமணியம் அவர்களும், ஜஸ்டிஸ் ராமசாமி கவுண்டர் அவர்களும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள், அவர்கள் அந்தக் குழுவில் இருந்திருக்கிருர்கள். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு தங்களுடைய கருத்தைத் தெரிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் பதில் அளிக்கும் நேரத்தில் அது போன்ற குறிப்பு இல்லை என்றுதான் குறிப்பிட்டேன். குறிப்பைப் பரிசீலனை செய்து அப்படியிருக்குமானல் ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்விகள்

(i) தனியார் அலுவல் நாளில் பேரவையை ஒற்றிவைக்கும் நேரம்

Dr. H. V. HANDE : On a point of order, Sir, I would like to know when the business of the House is likely to be wound up in the afternoon ? Will the debate be over by 1-30 p.m. or is it likely to go on till 2-00 p.m. ? Yesterday, during non-official day, the